1968 ஆகஸ்ட் 23] [திரு. சி. என். அண்ணாதுரை]

ருந்து, ஆத்திகர்கள் மனம் புண்படும் வகையில், அவர்களுக்கு குந்தகம் ஏற்படும் வகையில், அவர்களுடைய மத நம்பிக்கைக்கு ஊறு ஏற்படும் வகையில் இந்த அரசு எந்த விதமான காரியமும் செய்தது இல்லை. அது மட்டுமல்ல, ஆத்திகக் காரியங்களுக்கு இந்தச் சர்க்கார், பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற முறையில், உதவிகளையும், பணிகளையும் செய்துகொண்டு வந்திருக்கிறது. பல திருவிழாக்களிலும், மகாமகம் போன்றவைகளிலும் இந்த அரசு எந்த அளவிற்கு ஆத்திகர்களுக்குத் துணையாக இருந்திருக்கிறது என்பதை நாடு அறியும், நல்லவர்கள் அறிவார்கள். ஆகையினால், கடவுளர் படங்களை நீக்குவது பற்றிய உத்தரவிற்கும், ஆத்திகம், நாத்திகம் இவற்றிற்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

நாங்களே அழிக்கப்போகிறோம் என்று கூடச் சொல்லவில்லை. எங்களுக்கே பிள்ளைகள் பிறந்து, அழிப்பார்கள் என்று குறிப்பிட்டார்கள். பிள்ளைகள் செய்வது போன்ற முக்தி வேறு இல்லை என்று ஆத்திகம் சொல்கிறது. ஆகவே, இப்படி, அப்படி ஆக்கிவிடுவார்கள் என்று சொல்லுவதன் மூலமாக, தவறான பிரசாரத்தை கையாள்வது நாட்டு மக்களிடத்தில் பலன் தராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை நாளைக் காலை 9-00 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

8. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

175. Notification issued with G.O. Ms. No. 2634, Home, dated the 19th September 1967 in regard to the collection of quarterly tax at reduced rate in respect of certain tourist luxury coaches. [Laid on the Table of the House under section 11 (2) of the Madras Motor Vehicles Taxation Act, 1931 (Madras Act III of 1931.]

176. Notification issued with G.O. Ms. No. 23, Legislative Assembly, dated the 11th April 1968 in regard to an amendment to the Madras Legislature Travelling Allowance Rules, 1955, published at pages 131–138 of theRules Supplement to Part II of the Fort St. George Gazette, dated the 27th July 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Payment of Salaries Act, 1951 (Madras Act XX of 1951).]

B. Reports, Notifications and other Papers.

*55. Notification issued with G.O. Ms. No. 510, Revenue, dated the 2nd March 1968 in regard to exemption from payment of stamp duty in respect of the mortgage deed to be executed by the Jawans and Ex-servicemen Families Welfare Association, Vellore, in favour of the Committee for the Administration of the Post-war Services Reconstruction Fund for obtaining a loan of Rs. 80,000 under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899).

* Placed on the table of the House on 22nd August 1968.